1978 செப்டம்பர் 8]

மால்கோ நிறுவனத்திற்கு மின் கட்டணம்

*வின எண். 82—திரு. சி. மாணிக்கம்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1975-ம் ஆண்டு ஜூலை மாதம் அப்போதைய மத்திய அரசின் இரும்பு, கனிவள அமைச்சர் அவர்களிடமிருந்து தமிழக அரசாங்கத்திற்கு 'மால்கோ' அலுமினிய நிறுவனத்திற்கு எவ்வளவு மின் கட்டணம் விதிக்க வேண்டுமென கடிதம் ஏதேனும் வந்ததா?

(ஆ) ஆம் எனில், அக் கடிதத்தின் பேரில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம்.

(ஆ) மத்திய அரசின் யோசனையை கருத்திற்கொண்டு அனைத்து சாத்தியக்கூறுகளையும் அரசு பரிசீலித்து ''மால்கோ'' வுக்கான மின்கட்டணத்தைத் திருத்தி அமைத்துள்ளது.

திரு. சி. மாணிக்கம்: தலைவரவர்களே, தமிழகத்திலே மால்கோ போன்ற பெரிய தொழிற்சாலைகளிலிருந்து பல கோடிக் கணக்கான ரூபாய்க்குமேல் மின் கட்டண பாக்கி இருப்பதாகச் சொல்லப்படுகிறதே. எந்தெந்த கம்பெனிகள் எவ்வளவு எவ்வளவு பாக்கி என்கிற விவரத்தை அளிக்க அரசு முன்வருமா? அந்த நிலுவைகளை வசூலிக்க எந்தெந்தவகையில் நடவடிக்கை எடுக்கப் படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, 10,000 ரூபாய்க்கு மேல் நிலுவை வைத்திருக்கின்ற கம்பெனிகளின் பட்டியல் இதற்கு முன்னதாகக் கேட்கப்பட்ட கேள்விக்குரிய விவர அறிக்கையில் தரப்பட்டிருக்கிறது. இப்படி எல்லாம் நிலுவைகள் இருப்பதை வசூலிக்க வேண்டுமென்று இந்த அரசு அக்கறை கொண்ட காரணத்தினாலேதான் இந்த நிலுவைகளை வசூப்பதற்கு என்று தனியாக ஒரு சட்டத்தை இந்த மன்றத்தில் நிறைவேற்றி இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[(முற்பகல் 9.10)]

திரு. மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, சிறு தொழில் வளர்ச்சிக்காக வழங்கப்பட்டுள்ள மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது? மத்திய அரசினுடைய பரிந்துரையின்படி திருத்தியமைக்கப்பட்டதில் மால்கோவிற்கு மின் சாரக் கட்டணம் யூனிட் ஒன்றுக்கு எவ்வளவு என்பதையும் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மத்திய அரசினுடைய அந்த உத்தரவு, தனிவகையில் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு ப்ளாக்காக அவர்கள் பிரித்து பர்ஸ்ட் ப்ளாக்கிற்கு 25%, 7.75 காசு

செகன்ட் ப்ளாக் 25%-50%, 8.5 காசு, தேர்ட் ப்ளாக் 50%-75%, 9.5 காசு, போர்த் ப்ளாக் 10.25 காசு என்று அவர்கள் பரிந்துரைத்தார்கள். ஆனல் அதை அன்றிருந்த அரசு ஏற்றுக் கொள்ளாமல் அதையும் பரிசீலனை செய்து 23-8-75 அன்று ஒரு உத்தரவு பிறப்பிமது. அந்த உத்தரவின்படி டிமான்ட் ரேட் ஒரு கே.வி.ஏ .க்கு ரூ. 15, யூனிட் ரேட், யூனிட் ஒன்றுக்கு $3\frac{1}{2}$ பைசா, அதோடு சர்சார்ஜ் 50%, டாக்ஸ் $4\frac{3}{4}$%, ஸ்பெஷல் சர்சார்ஜ் 1 பைசா, ஆக For the above, the rate of tariff will be about 9.4 paise per unit. ஒரு யூனிட்க்கு 9.4 பைசாவாகும்.

திரு. ரா. உமாநாத்; மத்திய அரசாங்கத்திலிருந்து இப்படி ஒரு பரிந்துரை வருவதற்கு முக்கிய காரணம் என்ன, அப்படி காரணம் அதில் குறிப்பிடப்பட்டிருந்தால் அல்லது அமைச்சருக்குத் தெரிந்திருந்தால் அதை அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்பதோடு மத்திய அரசு பரிந்துரைத்திருக்கக்கூடிய ரேட்டை விட ஏற்கெனவே இருந்த ரேட் கூடுதலா அல்லது குறைச்சலா, பிறகு மாநில அரசாங்கம் மறுபரிசீலனை செய்து போட்ட பைனல் ரேட் மத்திய அரசாங்கம் பரிந்துரைத்ததை விடக் கூடுதலா அல்லது குறைச்சலா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மத்திய அரசின் பரிந்துரை வருவதற்கு முன்னல் ஐந்து பைசாபெர்யூனிட்that existed previously. மத்திய அரசு $7\frac{3}{4}$லில் இருந்து படிப்படியாக உயர்த்திக் கொண்டு வருகிருர்கள். அதன்படி எபெக்டீவ் ரேட் 9 பைசா ஆகிறது. ஆனல் போடப்பட்டது 9.4 பைசா.

திரு. இரா. தாமரைக்கனி: மால்கோ நிறுவனம் எந்தெந்த ஆண்டு எவ்வளவு பாக்கி வைத்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1973-74-ல் 7 லட்சம் ரூபாய், 74-75-ல் ரூ. 721.64 லட்சம், 75-76-ல் ரூ. 39.33 லட்சம், 76-77-ல் ரூ. 134.53 லட்சம், ஆக ரூ. 902.5 லட்சம்.

திரு. மு. ஆறுமுகம்: தமிழ்நாட்டில் சிறு தொழில்களுக்கு வழங்கப்படக் கூடிய மின்சாரத்திற்கு யூனிட் ஒன்றுக்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்று அதை முன்பே வைத்து இணைத்துக் கேட்டிருந்தேன். அதற்குப் பதில் அளிக்கவில்லை. அதற்கான பதிலை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தனிக் கேள்வி போடவும்.

சத்யமேவ ஜயதே TRUTH ALONE TRIUMPHS